
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1064

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

153








# வீடற்றோர் இரவுக் காப்பகம்!

## பொலிவான மெரினா, புகழ்பெறும் காலம்!

**`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**

மெரினா கடற்கரை சென்னையின் முக்கிய பொழுதுபோக்குத்தலம். முக்கிய தலைவர்களின் நினைவிடங்கள், எழில்மிகு மணற்பரப்பு, சில்லறை விற்பனைக் கடைகளின் பரபரப்பு எனத் தினமும் லட்சக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர்.

தமிழ்நாட்டின் பெருமையான அடையாளங்களில் ஒன்றாகத் திகழும் மெரினா கடற்கரையை, சர்வதேச அடையாளம் கொண்ட 'நீலக்கொடி கடற்கரை'யாக மாற்ற வேண்டும் என, சென்னை மாநகராட்சி மூலம் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது, திராவிட மாடல் அரசு.

### இரவு நேர காப்பகம்

நடைபாதை, சைக்கிள் பாதை, குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள், நிழல்தரும் மூங்கில் கூரைகள், ஓய்வு நாற்காலிகள் எனப் பல வசதிகளையும் உருவாக்கியுள்ளது. மாற்றுத்திறனாளிகளும் கடற்கரைக்கு வந்து செல்ல சிறப்புப்பாதை எனப் பல மேம்பாட்டுப் பணிகளை செய்துள்ளது தமிழ்நாடு அரசு.

குறிப்பாக, அனைத்துத் தரப்பினரும் மெரினா கடற்கரையைப் பாதுகாப்பாக மற்றும் வசதியாகப் பயன்படுத்தும் வகையில், மேம்படுத்தும் பணியைத் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், உருவாக்கிய முன்னுதாரணத் திட்டம் 'வீடற்றோர் இரவு நேர காப்பகம்.'

மெரினா கடற்கரையில், கைவினைப் பொருள்கள், பலூன்கள், அழகு சாதனப் பொருட்கள், பூக்கள் உள்ளிட்ட பொருள்கள் விற்பனை செய்பவர்களில் ஆதரவற்ற பலரும், அங்கேயே இரவு நேரங்களில் தங்கி வந்தனர். கடற்கரை மணற்பரப்பிலோ, அருகிலுள்ள சாலை ஓரத்திலோ தூங்கும் நிலையில் இருந்தனர். இதனால், அவர்களுக்கு பாதுகாப்பான உறைவிடச் சூழல் அமைக்க முடிவெடுத்த அரசு, உருவாக்கியதுதான் 'வீடற்றோர் இரவு நேர காப்பகம்.'

ஏற்கெனவே, ஆதரவற்ற மூத்த குடிமக்களுக்கான இல்லம், சாலையில் தானம் கேட்பவர்களுக்கான மறுவாழ்வு மையம் எனப் பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வரும் திராவிட மாடல் அரசு, மெரினா கடற்கரையில், இந்த இரவு நேர காப்பகத்தை அமைக்க முடிவு செய்தது. அதன்படி, அண்ணா சதுக்கம் பேருந்து நிலையத்தின் பின்புறத்தில், 2,400 சதுர அடி இடம் தேர்வு செய்யப்பட்டு, சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் ரூ.86.2 லட்சம் செலவில், அனைத்து அடிப்படை வசதிகளுடன் இந்த இரவுக் காப்பகம் கட்டப்பட்டது. இதை 22.12.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

### அடிப்படை வசதிகள்

இந்தக் காப்பகத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனி கழிப்பிடங்கள், குளியலறைகள், அவர்கள் பொருள்களைப் பாதுகாத்து வைப்பதற்கு அலமாரிகள், குடிநீர் வசதி, மின் வசதி என அனைத்து வகையான அடிப்படை வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அவர்களுக்கு வசதியான தங்குமிடமாக மட்டும் அரசு இதை அமைக்கவில்லை, மாநகராட்சியின் சார்பாக பாய், போர்வை, தலையணை உள்ளிட்ட 15 அத்தியாவசிய பொருள்களும் கூடவே அளித்துள்ளது.

இந்த இரவு நேரக் காப்பகத்தின் மூலம், சென்னை மெரினா கடற்கரையில் தங்கி, கைவினைப் பொருள்கள், பலூன்கள், அழகு சாதனப் பொருள்கள், பூக்கள் ஆகியவற்றை விற்பனை செய்து வரும் ஆதரவற்றோர் பயன் பெற்றுள்ளனர்.

இதைத் திறந்து வைத்து பேசிய துணை முதலமைச்சர் அவர்கள், "இரவு நேரங்களிலும், மழை நேரங்களிலும், வெயிலிலும் அவர்கள் தங்குவதற்கு இடமில்லாமல் இருந்த சூழலில் அவர்களுக்கெல்லாம் இந்த வசதி ஒரு பயனுள்ளதாகவும், பாதுகாப்பாகவும் இருக்கும் என்ற நம்பிக்கையோடு முதலமைச்சர் அவர்கள் இந்த வசதியை உருவாக்கக் கட்டளையிட்டார்" எனத் திராவிட மாடல் நாயகரின் எண்ணத்தை வெளியிட்டார்.

மேலும் 'இந்தத் திட்டத்தை விரிவாக ஆய்வு செய்து, மெரினாவில் தங்கியிருக்கக்கூடிய மற்றவர்களுக்கும் இதுபோன்ற வசதியை விரிவுபடுத்துவதற்கான ஆலோசனையில் ஈடுபட்டிருக்கின்றோம்' என்று மேலும் பலருக்கு நம்பிக்கை அளித்துள்ளார். மக்களின் நம்பிக்கை பெற்ற அரசு, மக்களுக்கு தரும் நம்பிக்கையை நிச்சயம் நிறைவேற்றும்!

...சாதனை தொடரும்



சென்னை, மெரினா கடற்கரையில் தங்கி, கைவினைப் பொருள்கள், பலூன்கள், அழகு சாதனப் பொருள்கள், பூக்கள் விற்பனை செய்து வந்த 86 ஆதரவற்றோர்கள் முதற்கட்டமாகப் பயன்பெறுவர். விரிவாக்கம் செய்ய அரசு ஆலோசனை.

சிறந்த கடற்கரைக்கான நீலக்கொடி சான்றிதழ், நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த சுற்றுச்சூழல் அமைப்பால் அளிக்கப்படுகிறது. 77 நாடுகள் இந்த அமைப்பில் இணைந்துள்ளன. தூய்மையான, சுகாதாரமான கடற்கரை, அனைவருக்குமான வசதிகள், சுற்றுலாப் பயணிகளுக்கான பாதுகாப்பு உள்ளிட்ட அம்சங்களை மதிப்பீடு செய்து 'நீலக்கொடி' அங்கீகாரம் அளிக்கப்படும். இச்சான்றிதழ் பெறும் கடற்கரைப் பகுதிக்கு, சர்வதேச அங்கீகாரம் கிடைப்பதுடன், அங்கு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பதால், உள்ளூர் பொருளாதாரமும் வளர்ச்சி பெறும்.



> "இரவு நேரங்களிலும், மழை நேரங்களிலும், வெயிலிலும் அவர்கள் தங்குவதற்கு இடமில்லாமல் இருந்த சூழலில் அவர்களுக்கெல்லாம் இந்த வசதி ஒரு பயனுள்ளதாகவும், பாதுகாப்பாகவும் இருக்கும்!"

## தமிழ்நாடு இப்படித்தான்! 'சிறை' திரைப்படம் வழங்கும் அனுபவம்.

இயக்குநர் சுரேஷ் ராஜகுமாரி இயக்கத்தில் வெளிவந்திருக்கும் திரைப்படம், 'சிறை'. தமிழ் திரைப்படங்களில் அரிதாகப் பேசப்படும் கதையம்சங்களுடன், மிகவும் முக்கியமான படமாக கவனம் பெற்றுள்ளது. 'வடஇந்தியாவின் மதவெறி தாக்குதல்களுக்கு இடையே, மிகவும் பொருத்தமான நேரத்தில், தமிழ்நாடு இப்படித்தான் என்று வலுவாகச் சொல்ல வந்திருக்கிறது 'சிறை' என அந்தத் திரைப்படம் குறித்து, தனது கருத்தைப் பதிவு செய்துள்ளார் எழுத்தாளர் அழகிய பெரியவன். அவரது பதிவிலிருந்து...

"இந்தியாவில் மிகச்சிறந்த அரசியல் அமைப்புச் சட்டம், குற்றம் மற்றும் மக்கள் வழக்குகள் தொடர்பான நடைமுறை சட்டங்கள், அருமையான நீதிமன்றத் தீர்ப்புகள், வழிகாட்டு நெறிமுறைகள், அரசாணைகள் என்று எல்லாமே இருக்கின்றன. ஆனால், அவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்தும் இடங்களில் சாதிய, மதவாத, ஆணாதிக்க, சுயநல எண்ணம் கொண்ட சராசரி மற்றும் சராசரிக்கும் கீழான மனிதர்களே பெரும்பாலும் நிறைந்திருக்கிறார்கள்.

இவர்கள் மனங்களில் முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், தலித் மக்கள், பெண்கள் குறித்த பிற்போக்குக் கருத்துகள் பொதுக்கருத்துகளாகப் புரையோடிக் கிடக்கின்றன. இவற்றைத் தகர்க்கும் விதமாக நூல்களும் கருத்துகளும் அவ்வப்போது வந்துகொண்டிருந்தாலும் 'சிறை' திரைப்படம் மிகச்சிறப்பாக, காவல்துறை, சிறைத்துறை மற்றும் நீதித்துறையில் இஸ்லாமிய மக்களுக்கு எதிராக அப்பிக்கிடக்கும் அழுக்குகளை தோலுரித்துக் காட்டியிருக்கிறது.

மிகவும் இயல்பான தாயன்பு, காதல், சகமனிதரின் மீதான அக்கறை ஆகிய கூறுகளால் நெய்யப்பட்ட கதையின் வழியாக, அற்புதமான திரைமொழியால் மதச்சார்பின்மை மற்றும் மனிதநேய கருத்தியலை கவித்துவமாக வழங்கியிருக்கிறார் சுரேஷ் ராஜகுமாரி. வட இந்தியாவின் மதவெறி தாக்குதல்களுக்கு இடையே, மிகவும் பொருத்தமான நேரத்தில், தமிழ்நாடு இப்படித்தான் என்று வலுவாகச் சொல்ல வந்திருக்கிறது 'சிறை'. இந்தப் படத்தை அவசியம் திரையரங்கில் சென்று பாருங்கள் என்பது என் கோரிக்கை' என்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



### கட்சி எப்படி இருக்கு?



வி.கே.முருகன்

2015-ஆம் ஆண்டுவாக்கில், உத்தமபாளையம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக இருந்தபோது, நம் தானைத் தலைவர் கலைஞர் அவர்களை அருகில் பார்க்கும், இந்த வாய்ப்பு அமைந்தது. தேர்தல் நிதி அளித்தேன். கவரின் பெயரைப் பார்த்து விட்டு, எந்த மாவட்டம்? எனக் கேட்டதுடன், கட்சி எப்படி இருக்கு? எனக் கேள்வி எழுப்பினார். "சின்ன பசங்ககிட்ட கேட்டா நிலவரம் தெரியும்யா" எனக் கூறி அனுப்பி வைத்தார். வாழ்நாளில் மறக்க முடியாத நினைவு.

**– வி.கே.முருகன், பண்ணைபுரம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், தேனி தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### அண்ணா ஆணையிட்டால்...

1966-ஆம் ஆண்டு, விருகம்பாக்கத்தில் நடைபெற்ற கழகத்தின் நான்காவது மாநில மாநாட்டைத் திறந்து வைத்து எழுச்சி உரையாற்றினார் கலைஞர். "காடு மேடு நிறைந்து, கள்ளிப்புதர்கள், கருந்தேள்கள் குடியிருந்த இந்த இடத்தை எழில்மிக்க பூமியாக மாற்றி அமைத்திருக்கிறோம். அறிஞர் அண்ணா ஆணையிட்டால், நாங்கள் ஏன்? காடாக இருக்கும் இந்த நாட்டை, நாடாக மாற்றி அமைக்க மாட்டோமா? எனக் கேள்வி எழுப்பினார். ஆராவாரம் அடங்க வெகுநேரமானது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131